# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029200

(15)

1. District மாவட்டம் : புதுக்கோட்டை  PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை  Year: ஆண்டு  FIR No.: முதஅ. எண்: 06/  Date: நாள்: 25-11-2019

2. (i) Act சட்டம்: IPC  Sections பிரிவுகள்: 409, 468, 471 IPC and
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 109 IPC 13 (1) (a) r/w
   (iii) Act சட்டம்: as amended by the Prevention of Corruption (Amended) Act-2018  Sections பிரிவுகள்: 13 (2) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amended) Act-2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் ஜனவரி 2011 முதல்  Date to : நாள் வரை டிசம்பர் 2016 வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25-11-2019  Time நேரம் : 13.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: நிலைக்கட்ட விசாரணை மேலாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: விரிட்டு அலுவலகம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் சுமார் 70 கி.மீ வடகிழக்கே
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: S. மனோகரன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: L. சிவானந்தம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 04.06.1965  (d) Nationality : நாட்டினம்: இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: காவல் ஆய்வாளர் கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர் I/C புதுக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1). திரு. S.P.K. சேகர், த/பெ. கணேசன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், விரிட்டு அலுவலகம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம் புதுக்கோட்டை. 2). திரு. க. கனிமுத்து (தலைவர்) த/பெ. கணேசன், விரிட்டு அலுவலகம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   நிலைக்கட்ட விசாரணை செய்யப்பட்டு 2 மாதங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டதால் காலதாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

இன்று 26.11.2018ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு நான் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்த போது உத்தரவின்படி இவ்வழக்கை பதிவு செய்தேன். வழக்கின் விபரம் பின்வருமாறு:— புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், விச்சூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.S.R.K.தேவகி என்பவர் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், விச்சூர் ஊராட்சி மன்றத்தலைவராக கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை பணிபுரிந்துள்ளார். மேலும் மேற்படி ஊராட்சியில் அந்த காலக்கட்டத்தில் அவரது கணவர் காளிமுத்து என்பவர் ஊராட்சி மன்றத் தலைவருக்குரிய அனைத்து பணிகளையும் செய்துள்ளார். மேற்படி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.S.R.K.தேவகி கடந்த செப்டம்பர்–2016 மாதம் வரை தனது கணவர் காளிமுத்து என்பவருடன் சேர்ந்து விச்சூர் ஊராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் தண்ணீரை கொண்டு மூன்று ஆண்டுகளாக அவர்களுக்கு சொந்தமான குளத்தில் மீன்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ................ Rank ................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................ பதவி ................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Manoharan 28/11/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 28-11-2018 / 15.30 Hrs

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை DSP (VAC) Thanjavur I/c. Pudukkottai No. எண் ........

வளர்த்து வருவதாகவும், மேலும் சுமார் ஒரு மா பரப்பில் குளம் மற்றும் சுமார் 2 ஏக்கர் பரப்பில் வாழைத்தோட்டம் மற்றும் கீரை, காய்கறி தோட்டம் ஆகியவற்றிற்கு தண்ணீர் பாய்ச்சி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குடிநீரை பயன்படுத்தாமல் தன் சொந்த உபயோகத்திற்கு தண்ணீரை பயன்படுத்தி வந்ததாகவும், அதன் மூலம் விச்சூர் ஊராட்சிக்கு மூன்று ஆண்டுகளில் பல லட்ச ரூபாய் அதிக மின் கட்டணம் செலுத்திய வகையில் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்றும் திரு.ஜான் செல்வரெத்தினம், த/பெ பிரான்சிஸ், கதவு எண்.194ஏ, குணபதிமங்களம், விச்சூர் அஞ்சல் மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் 29.10.2014 அன்று எழுதி அனுப்பிய புகார் மனுவின் பேரில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா PE.141/2014/PUB/HQ dated 17.11.2014 உத்தரவின்படி புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் மார்ஜினில் கண்ட எதிரி 1.திருமதி.S.R.K.தேவகிகாளிமுத்து மீது காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.பி.தங்கவேல் அவர்களால் துவக்க கட்ட விசாரணை (PE:141/2014/PUB/HQ)ன் படி மேற்கோள்ளப்பட்டது. மேற்படி துவக்கக்கட்ட விசாரணை முடிவில் கீழ்க்கண்ட நம்பத்தகுந்த தகவல்கள் தெரியவந்துள்ளது. விச்சூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து விச்சூர் மற்றும் குணபதிமங்களத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய 2011ஆம் ஆண்டு குடிநீர் பைப் லையனை இணைத்து, சில வீடுகளுக்கு நேரடியாகவும், சில இடங்களில் பொதுவாகவும் குடிநீர் பைப்லையன் இணைப்பு ஏற்படுத்தி, அதில் ஒரு பைப் லைன் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.S.R.K.தேவகி என்பவரது வீட்டிற்கு போடப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சி மன்றத்தலைவர் குடியிருக்கும் அவரது வீடு மற்றும் அவரது வீட்டின் பின்புறம் உள்ள சுமார் 10 அடி ஆழமுள்ள குளம் பட்டா எண்.536 புல எண்.180-9ஏ ன்படி 0.04.5 ஏர்ஸ் (1) ஆகும். அவருடைய வீடு மற்றும் பின்புறம் உள்ள குளம் சுமார் 11 செண்ட் மற்றும் பாதி குளம் அரசு புறம்போக்கை சேர்ந்தது. மேற்படி குளம் கிராம கணக்குகளின் படி சாகுல் அமீது மனைவி ஆயிசாம்மாள் வகையறா என உள்ளது. மேலும் விச்சூர் ஊராட்சி மன்ற தலைவர் தேவகி மற்றும் அவரது கணவர் திரு.க.காளிமுத்து ஆகிய இருவரும் குடியிருக்கும் வீட்டிற்கு பின்புறம் உள்ள குளத்திற்கு அருகே 1 1/2 ஹெச்பி மோட்டார் பொறுத்தி, அதற்கு தனியாக மின் இணைப்பு பெறாமல் மேற்படி ஊராட்சி தலைவர் குடியிருக்கும் வீட்டு மின் இணைப்பு எண்.283லிருந்து வீட்டிற்கு வலது புறம் உள்ள சுமார் 850 மீட்டர் தொலைவில் உள்ள நெல் வயலுக்கு குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு போய் பயன்படுத்தியுள்ளனர். மேற்படி நிலமானது கிராம பட்டா எண்.60, புல (2) எண்.175-5டி-ல் நன்செய் 0.25.5 ஏர்ஸ் பரப்புள்ளது. மேற்படி நிலமானது சாகுல் அமீது மனைவி ஆயிசாம்மாள் வகையறாவைச் சேர்ந்த நிலமாகும். இந்த 63 செண்ட் நிலத்தில்

வறட்சியாக இருந்த கடந்த 2012–2013ஆம் ஆண்டு மற்றும் 2013–2014ஆம் ஆண்டிலும் மேற்படி ஊராட்சி மன்றத்தலைவர் தேவகியும் அவரது கணவர் காளிமுத்துவும் நெல் சாகுபடி செய்து பயனடைந்துள்ளனர். மேலும் நெல் பயிரிடப்படுவதற்கு முன் கீரை மற்றும் காய்கறி தோட்டம் வைத்து குடிநீரை பயன்டுத்தியுள்ளனர். மேலும் ஊராட்சி மன்றத்தலைவரின் வீட்டிற்கு எதிர்புறம் உள்ள தென்னை மரங்களுக்கும் இந்த குளத்து தண்ணீரைத்தான் மேற்கண்ட 11/2 ஹெச்பி மோட்டார் மூலம் பயன்படுத்தியும், மேற்கண்ட வீட்டு மின் இணைப்பு எண்.283க்கு கடந்த 10/2011, 12/2011 ஆகிய இரு மாதங்களுக்கும் ரூ.589/–ம், 2012ஆம் ஆண்டில் ரூ.1479/–ம், 2013ஆம் ஆண்டில் ரூ.2950/–ம், 2014ம் ஆண்டில் ரூ.2580/–ம் மின் கட்டணமாக செலுத்தியுள்ளார். இதன் மூலம் விச்சூர் ஊராட்சி தலைவர் மற்றும் அவரது கணவர் ஆகிய இருவரும் தனது வாழை தோப்பு, தென்னந்தோப்பு மற்றும் நெல் வயல் ஆகியவைகளுக்கு குளத்திலிருந்து 11/2 ஹெச்பி மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சியதால் மேலே கண்டவாறு மின் கட்டண பட்டியல் அதிகமாக செலுத்தியுள்ளார்கள் என்பதும், விச்சூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் வீட்டின் பின்புறம் உள்ள குளத்தின் இடது பக்கத்தில் சுமார் 25 சென்ட் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் அதாவது விச்சூர் ஊராட்சி தலைவர் திருமதி.தேவகி அவரது கணவர் திரு.க.காளிமுத்து, காளிமுத்து, தம்பி திரு.கார்த்திக்கேயன் அவரது மனைவி அமராவதி, காளிமுத்து கடைசி தம்பி சுகுமாறன் அவரது மனைவி கோமதிஜெயம், காளிமுத்துவின் தாயார் அஞ்சம்மாள் ஆகிய ஏழு நபர்களுக்கு விச்சூர் கிராம புல எண்.179/21, புல எண்.179/24, புல எண்.179/6, புல எண்.179/27, புல எண்.179/28 ஆகிய புல எண்களில் வீடு கட்டுவதற்காக 7X0.01.5=10.5 ஏர்ஸ் காலிமனையாக கடந்த 03.06.2013ல் மணமேல்குடி வட்டாட்சியர் அவர்களால் வீடு கட்ட அரசால் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 7 காலி மனையிலும் வீடு கட்டாமல், இந்த நிலத்தில் விச்சூர் ஊராட்சி மன்ற தண்ணீரை விதிமுறைகளுக்கு மீறி பயன்படுத்தி ஒரு வருடத்திற்கு (2013ஆம் ஆண்டு) முன்பு வாழை பயிரிடப்பட்டு, அனைத்து வாழைகளும் தார் ஈன்றுள்ளது. மேற்படி வறட்சியான காலத்தில் விச்சூர் கிராமத்தில் வேறெங்கும் நெல், வாழை பயிரிடப்படவில்லை. இதற்கும் விச்சூர் ஊராட்சி குடிதண்ணீர் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விச்சூர் ஊராட்சி, வண்ணான்கேனியில் உள்ள மின் இணைப்பு எண்.491ல் இயங்கி வரும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து பயன்பெறும் குணபதிமங்களம் மற்றும் விச்சூரில் உள்ள தனிநபர் குடிநீர் குழாய் இணைப்புகள் கடந்த 2011–2012ஆம் ஆண்டில் 38 இணைப்புகளும், 2012–2013ஆம் ஆண்டில் 26 இணைப்புகளும், 2013–2014ஆம் ஆண்டில் 4 இணைப்புகளும், 2014–2015ஆம் ஆண்டில் 3 இணைப்புகளும் ஆக மொத்தம் 71 குடிநீர் குழாய் இணைப்புகள் மட்டும் புதிதாக கொடுக்கப்பட்டும்,

இருந்தன் மூலம் மேற்கண்ட குடிநீர் இணைப்புகளுக்கு அதிகமான மின் பயனீட்டு தொகை வர வாய்ப்பில்லை என்றும், விச்சூர் ஊராட்சி மன்ற தலைவர் தேவகி மற்றும் அவரது கணவர் க.காளிமுத்து ஆகிய இருவரும் தங்களது சொந்த பயன்பாட்டிற்கும், விவசாயத்திற்கும் தண்ணீரை பாய்ச்சி தாங்கள் பயனடைந்ததன் மூலம் மேற்கண்ட மின் இணைப்பில் மின் கட்டணம் வருடாவருடம் உயர்ந்துள்ளது. மேலும், மேலே கண்டவாறு அரசு விதிமுறைகளை மீறி விச்சூர் ஊராட்சி குடிதண்ணீரை மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் விச்சூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.S.R.K.தேவகி மற்றும் அவரது கணவர் திரு.க.காளிமுத்துவும் சேர்ந்து தங்களது விவசாயத்திற்கு பயன்படுத்தியதால் விச்சூர் கிராம வண்ணான்கேனி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியின் மின் இணைப்பு எண்.491க்கு மின் கட்டணமானது கடந்த 2010ஆம் ஆண்டில் ரூ.22,380/–ம், 2011ஆம் ஆண்டில் ரூ.25,800/–ம், 2012ஆம் ஆண்டில் ரூ.49,509/–ம், 2013ஆம் ஆண்டில் ரூ.1,19,351/–ம், 2014ஆம் ஆண்டில் ரூ.1,23,722/–ம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மின் இணைப்பில் இருந்து அதிகளவில் மின்சாரத்தை பயன்படுத்தி மேற்படி ஊராட்சி மன்ற தீர்மானம் மூலம் ஒவ்வொரு வருடமும் அதிகமான மின்சாரம் உபயோகத்திற்கான மின்தொகை செலுத்தப்பட்டு விச்சூர் ஊராட்சிக்கு அதிகமான நிதி இழப்பீடு ஏற்படுத்தி மேற்படி ஊராட்சி மன்றத்தலைவர் தேவகி அவரது கணவர் உடந்தையுடன் ஊராட்சி மன்றத்தலைவர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட பணியை சரிவர செய்யாமல் அரசு விதிமுறைகளை மீறி தங்களது சுயலாபத்திற்கு பயன்படுத்தி அரசு பணத்தை கையாடல் செய்ய வேண்டும் என்ற குற்றமுறு எண்ணத்துடன் செயல்பட்டு அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்படி துவக்கக்கட்ட விசாரணை அறிக்கையின் முடிவு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம், சென்னை விழிப்புப்பணி ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா எண்.PE:141/2014/PUB/HQ நாள்:11.09.2018– உத்தரவின்படி எதிரி 1.திருமதி.S.R.K.தேவகி, க/பெ காளிமுத்து, முன்னாள் விச்சூர் ஊராட்சி மன்றத்தலைவர், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் திரு.காளிமுத்து, த/பெ கருப்பையா, (குனிநபர்) குணபதிமங்களம், விச்சூர் (அஞ்சல்), மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர்கள் மீது இன்று 28.11.2018 மதியம் 13.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.06/2018 பிரிவுகள் 409, 468, 471 IPC r/w 109 IPC and section 13(1) (a) r/w 13(2) of the Prevention of Corruption Act-1988 as Amended by the Prevention of Corruption (Amended) Act-2018 இன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

S. [signature] 28/11/201
DSP (VAC)
Thanjavur I/C Pudu

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் கணம் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், இதன் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. Janle
28/11/2018
[S. MANOHARAN]
Deputy Superintendent
of police (V&AC)
Thanjavur I/C Pudukkottai